**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சூலூர்</u>**

**<u>முன்னிலை: திருமதி.எம். சந்தோஷம்., பி.எஸ்.சி., பி.எல்.,</u>**

**<u>மாவட்ட உரிமையியல் நீதிபதி, சூலூர்</u>**

திருவள்ளுவர் ஆண்டு 2056 விசுவாவசு வருடம், பங்குனி மாதம் 2 ம் நாள்

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16 -ம் நாள் திங்கள்கிழமை

**<u>இடைக்கால மனு எண். 4/2025</u>**

**in**

**<u>அசல் வழக்கு எண். 89/2022</u>**

1. சுப்பாத்தாள், க/பெ. சென்னிமலைக் கவுண்டர்,
வயது 90, வசிப்பிடம் 57B, நல்லி கவுண்டன் தோட்டம்,
சேடப்பாளையம், சோமனூர், சூலூர் - 641668.

2. பொன்னம்மாள், க/பெ. ராமசாமி, வயது 69,
வசிப்பிடம் 125 பவர் ஹவுஸ் ரோடு,
சோமனூர், சூலூர் - 641668.

3. வேலுசாமி, த/பெ. ராம கவுண்டர், வயது 69,
வசிப்பிடம் 57B, நல்லி கவுண்டன் தோட்டம்,
சேடப்பாளையம், சோமனூர், சூலூர் - 641668.

4. விஜயகுமார், த/பெ. வேலுசாமி, வயது 45,
வசிப்பிடம் 57B, நல்லி கவுண்டன் தோட்டம்,
சேடப்பாளையம், சோமனூர், சூலூர் - 641668.

5. தனபால், த/பெ. வேலுசாமி, வயது 42,
வசிப்பிடம் 57B, நல்லி கவுண்டன் தோட்டம்,
சேடப்பாளையம், சோமனூர், சூலூர் - 641668. ... **மனுதாரர்கள்/வாதிகள்**

//எதிர்//

1. ரங்கசாமி, த/பெ. ராமன கவுண்டர், வயது 70,

வசிப்பிடம் மேற்கு மாகாளியம்மன் கோவில்,

இச்சிப்பட்டி, பல்லடம்.

2. ஆறுக்குட்டி (இறப்பு)

3. கோவிந்தசாமி, த/பெ. ஆறுக்குட்டி, வயது 43,

வசிப்பிடம் 5/263, கனல்காடு, இச்சிப்பட்டி,

காரணம்பேட்டை, பல்லடம்.

4. துளசிமணி, க/பெ. சின்னச்சாமி, மதுப்பிரியா

சைசிங், பெருமாகவுண்டன்பாளையம்,

காரணம்பேட்டை, பல்லடம்.

(Amended as per order in I.A.No.7/2025 dated 31.07.2025)

... **எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்**

உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 26 விதி 9 பிரிவு 151ன் கீழ் சூலூர் துணைப்பதிவாளர் கோப்பில் பதிவு செய்யப்பட்ட 12.03.1962 தேதியிட்ட சர்ச்கைக்குரிய ஆவண எண்.311/1962 ஆக பதிவு செய்யப்பட்ட ஆவணம் மற்றும் ஒப்புக்கொள்ளப்பட்ட 05.03.2007 தேதியிட்ட கிரையப் பத்திரம் எண்.3152/2007, 10.12.2008 தேதியிட்ட பிழைத் திருத்தப் பத்திரம் எண்.13083/2008 ஆகிய ஆவணங்களில் உள்ள சின்னம்மாளின் கைரேகை மற்றும் கட்டைவிரல் ரேகை பதிவேட்டுடன் ஒப்பிட்டு பார்க்க சென்னையிலுள்ள அரசு கையெழுத்து, கைரேகை நிபுணர், தடயவியல் ஆய்வக அலுவலகத்திற்கு எடுத்து செல்ல நீதிமன்ற ஆணையாளரை நியமிக்க உத்தரவிட வேண்டி மனுதாரர்கள்/வாதிகளால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கலான நாள் : 04.01.2025

மனுவின் மீது வில்லை : ரூ.20/-

இந்த மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.விஸ்வநாதன், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி.D.சித்ரா, அவர்கள் ஆஜராகியும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் சீரிய கண்காணிப்பில் இருந்து வந்து சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டு இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**உத்தரவாணையுரை**

1). இந்நீதிமன்றம் வழக்கறிஞர் திரு. K.குமார் (M.S.No.1365/2002) அவர்களை நீதிமன்ற ஆணையாளக நியமிக்கிறது. நீதிமன்ற ஆணையாளர் சூலூர் துணைப்பதிவாளர் கோப்பில் பதிவு செய்யப்பட்ட 12.03.1962 தேதியிட்ட சர்ச்சைக்குரிய ஆவண எண்.311/1962 ஆக பதிவு செய்யப்பட்ட ஆவணம் மற்றும் ஒப்புக்கொள்ளப்பட்ட 05.03.2007 தேதியிட்ட கிரையப் பத்திரம் எண்.3152/2007, 10.12.2008 தேதியிட்ட சூலூர் துணைப்பதிவாளர் கோப்பில் பதிவு செய்யப்பட்ட பிழைத் திருத்தப் பத்திரம் எண்.13083/2008 ஆகிய ஆவணங்களில் உள்ள சின்னம்மாளின் கைரேகை மற்றும் கட்டைவிரல் ரேகை பதிவேட்டுடன் ஒப்பிட்டு பார்க்க சென்னையிலுள்ள அரசு கையெழுத்து, கைரேகை நிபுணர், தடயவியல் ஆய்வக அலுவலகத்திற்கு எடுத்துச் செல்லுமாறு உத்தரவிடுகிறது. நீதிமன்ற ஆணையாளருக்கு உரிய ஊதியம் ரூ.15000/- வழங்க மனுதார்கள்/வாதிகளுக்கு இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. அழைக்க வாய்தா 16.04.2026

**<u>செலவு தொகை பட்டியல்</u>**

//இல்லை//

(செலவு தொகைப் பட்டியல் இருதரப்பிலும் தாக்கல் செய்யப்படவில்லை)

2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 16 ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு இந்நீதிமன்ற முத்திரையிட்டு வழங்கப்பட்டது.

Sd/M.Santhosham

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**சூலூர்.**

Final Order
IA.No.4/2025 in
OS. No.89/2022 in
Dated:. 16.03.2026
DMC, Sulur.